**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். STC 475 /2017**
**வழக்கு சாட்சி. அ.சா.4**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | மாணிக்கம் | **தாலுகா:** | அறந்தாங்கி |
| **தந்தை பெயர்:** | உடையப்பன் | **தொழில்:** | காவல் உதவி ஆய்வாளர்(ஓய்வு) |
| **கிராமம்:** | களப்பக்காடு | **வயது:** | 70 /2026 |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**A2 absent. A7 died. A1, A3, A4, A5, A6, A8 present. Both side Counsel present.**

**As per Circular of the Hon'ble High Court of Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**தேதி : 23.03.2026.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

நான் நாகுடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி தற்போது பணிஓய்வு பெற்று மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 21.07.2013 ஆம் தேதி 18.00 மணியளவில் நாகுடி காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த வல்லம்பக்காடு கிராமத்தினை சேர்ந்த பிரேமா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.87/2013, இ.த.ச. பிரிவுகள் 147, 342, 323, 354, 506(1) இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். பிரேமா அளித்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.–3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.–4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 22.07.2013 ஆம் தேதி காலை 08.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாங்குடி, சாத்தையா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு **மாதிரி வரைபடம், பார்வை மகஜர்** ஆகியன தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.–5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் 1 முதல் 11 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்தேன். எதிரிகளை தேடிவந்த நிலையில் இவ்வழக்கின் எதிரிகள் மாண்புமிகு புதுக்கோட்டை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டதால் எதிரிகளை கைது செய்யவில்லை. பின்னர் வழக்கின் சம்பவத்தில் காயம் அடைந்த வாதிக்கு சிகிச்சை அளித்த அறந்தாங்கி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.புனிதகுமார் அவர்களை விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்றேன். இவ்வழக்கினை விசாரணை செய்தததில் இவ்வழக்கில் சட்டப்பிரிவுகளை இ.த.ச. பிரிவுகள் 147, 342, 323, 354,

506(1) என்பதில் இருந்து இ.த.ச. பிரிவுகள் 147, 342, 323, 354, 506(2) ஆக சட்டப்பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.–6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது 26.07.2013 ஆம் தேதியன்று இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

பட்டியல் சாட்சி 1 முதல் 3 வரையில் உள்ள நபர்கள் உறவினர்கள் என்றால், சரிதான். பட்டியல் சாட்சி 1 பிரேமா எதிரிகளை தாக்கியதாக கூறி இந்நீதிமன்றத்தில் CC 202/2013 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்கண்ட வழக்கிலும் விசாரணை அதிகாரி நான் தான் என்றால், சரிதான். எதிரிகளுக்கும், சாட்சி 1–க்கும் இடையே உரிமையியல் பிரச்சனை இருந்து வருகிறது என்றால், அதுபற்றி கூறவில்லை. சம்பவ நடந்த மறுதினம் தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால், ஆமாம் இரவு நேரம் என்பதால் அடுத்த நாள் சென்றேன். சம்பவ இடத்தில் இருந்து தடய பொருட்கள் ஏதும் நான் கைப்பற்றப்படவில்லை என்றால், சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால், சரியல்ல. பட்டியல் சாட்சி 1 அளித்த பொய்யான புகாரின் பேரில் நான் முறையான புலன்விசாரணை செய்யாமல் எதிரிகளின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எதிரிகள் எவ்வித குற்றச் செயலிலும் ஈடுபடவில்லை என்றும், பட்டியல் சாட்சி –1 முன்விரோதத்தினை மனதில் வைத்துக்கொண்டு பொய்யான புகாரினை கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**